நாகப்பட்டினம் நகராட்சி

**2022–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 –ம் நாள் வெள்ளி கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகரமன்ற சாதாரன கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 26–08–2022 | பொருள் எண்.1<br>**தனி :** நகரமன்ற உறுப்பினர் திருமதி.கு.ஜோதிலெட்சமி அவர்களால் முன்மொழியப்பட்டு நகரமன்ற உறுப்பினர் திரு.த.கமலநாதன் அவர்களால் வழிமொழியப்பட்டு கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>உலகமே வியக்கும் வண்ணம் செஸ் ஒலிம்பியாட் போட்டியை தமிழகத்தில் வெற்றிகரமாக நடத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும்,<br>சுதந்திர போராட்ட தியாகியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமாகிய தோழர் அய்யா நல்லகண்ணு அவர்களுக்கு தமிழக அரசின் உயரிய விருதான தகைசால்தமிழர் விருது வழங்கிய முதல்வருக்கும், அந்த விருது தொகையான ரூ.10 இலட்சத்துடன் மேலும் ரூ.5000/– சேர்த்து ரூ.1,05,000/–மாக தமிழக அரசின் முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்கிய அய்யா நல்லகண்ணு அவர்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துனையும் தெரிவிக்ககோரும் தீர்மானம். | தீர்மானம் எண். 260<br>மன்றத்தில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. |
| 26–08–2022 | பொருள் எண்.2<br>மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண்.1925/2022/ஊ.வ.10, நாள்.02–06–2022 ன்படி, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் முன்னால் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 03–06–2022 ஆம் தேதி அன்று மக்களுக்கான தூய்மை இயக்கம் செயல்படுத்திட ஏதுவாக திடக்கழிவு மேலாண்மை திட்டம், பிளாஸ்டிக் பையை ஒழித்து மஞ்சப்பை கையில் எடுத்தல் போன்ற விழிப்புணர்வை பொதுமக்கள் முன்னிலையில் நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வரால் ஆணையிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் மக்களுக்கான தூய்மை இயக்கம் திட்டத்தின் கீழ், வார்டு வாரியாக மாதந்தோறும் இரண்டு மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் சுழற்சி முறையில் சிறப்பு தூய்மைப்பணிகள் நாளது தேதி வரை நடைப்பெற்று வருகிறது. இந்நிகழ்வுகளில் மக்களுக்கான தூய்மை இயக்கத்தின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கலைநிகழ்ச்சி, நாடக நிகழ்ச்சி, ஒவியம் வரைதல் மற்றும் அது தொடர்பான இதர சிறப்பு பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிருவாக இயக்குநரின் கடிதம் ந.க..எண்.9514/2022/SBM–2, நாள்.18–07–2022 இல், ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையை விழிப்புணர்வு சிறப்பு பணிகளுக்கான செலவினங்களை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டுப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2395/2015/எச்1 | தீர்மானம் எண்.261<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.3<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, காளிக்குட்டி நாயக்கன் தெரு, கதவு எண்.867/6 என்ற முகவரியில் இயங்கிய திரையரங்கம் நிர்வாக காரணங்களால் தொடர்ந்து செயல்படாததால் திரையரங்க உரிமத்தை 31–05–2011ல் ரத்து செய்யப்பட்டதாகவும், தற்பொழுது மேற்படி முகவரியில் ஆண்டவர் நர்சரி மற்றம் பிரைமரி ஸ்கூல் 2015–2016 முதல் நடத்தப்பட்டு வருவதால் திரையரங்கத்திற்கு உண்டான சொத்துவரியை ரத்து செய்தும் கல்வி நிறுவனத்திதிற்கு உண்டான வரியை நிர்ணயம் செய்து வழங்க கோரி மேற்படி கல்வி நிறுவனத்தின் செயலாளர் திரு.எஸ்.செந்தில்குமார் விண்ணப்பம் அளித்துள்ளார். நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்லைவர் அவர்களின் செயல்முறை ஆணை மு.மு.எண்.10845/2016/சி1, நாள்.30–06–2016 ன்படி திரையரங்கத்திற்கான “சி”படிவம் உரிமத்தினை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. நாகப்பட்டினம் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள் மு.மு.எண்.2602/அ3/2015 நாள்.29–06–2015 | தீர்மானம் எண்.262<br>நடப்பாண்டு வரை நடைமுறையில் உள்ள வரி நிலுவைத்தொகை முழுவதையும் செலுத்திய பிறகு விண்ணப்பத்தாரரின் கோரிக்கையை நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டது |

ன்படி நாகூர் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி L.K.G to V std வரையிலும் 01–06–2015 முதல் 31–05–2016 வரையிலும் தற்போது துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தினை வருவாய் ஆய்வாளரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேற்படி திரையரங்கத்திற்கு உண்டான சொத்து வரி விதிப்பு எண்.098/002/00305ற்கு உண்டான சொத்துவரி 2012–2013 முதலாம் அரையாண்டு முதல் 2016–2017 இரண்டாம் அரையாண்டு வரை உள்ள காலத்திற்கான தொகை ரூ.2,61,510/–செலுத்தப்பட்டவுடன் 2017–2018 முதலாம் அரையாண்டு முதல் சொத்துவரியை ரத்து செய்து மேற்படி இடத்தில் உள்ள கல்வி நிறுவனத்திற்கு உண்டான வரியை நிர்ணயம் செய்ய குறிப்பளித்துள்ளதால், திரையரங்கத்திற்கு உண்டான பழைய வரியை 2017–2018 முதலாம் அரையாண்டு முதல் ரத்து செய்யவும், மேற்கண்ட இடத்தில் இயங்கும் கல்வி நிறுவனத்திற்கு 2017–2018 முதலாம் அரையாண்டு முதல் புதியதாக சொத்துவரி விதிப்பு, செய்யவும் மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்.1839/2022/அ1

---

26–08–2022

பொருள் எண்.4

நாகப்பட்டினம் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.ச.பிரதீபா என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனது சொந்த ஊரான ஊத்தங்கரைக்கு அருகில் உள்ள திருப்பத்துார் நகராட்சி அல்லது தருமபுரி நகராட்சிக்கு பணி மாறுதல் செய்திட விண்ணப்பம் அளித்துள்ளார், அன்னாரின் விண்ணப்பத்தின்படி இந்நகராட்சியிலிருந்து பணி மாறுதலில் செல்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்.2775/2022/சி1

தீர்மானம் எண்.263
அ.கு.அனுமதிக்கப்பட்டது

---

26–08–2022

பொருள் எண்.5

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கழிவு நீர் அகற்றும் வாகனம் TN-51-H-9662-ற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்யும் பணி மேற்கொள்ள 03–08–2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளியின் விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் நடுவாணியத்தெரு, மன்னார்குடி | 3,98,832 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மன்னார்குடி | 4,24,475 |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்கலாம். |
| | 2 | கழிவு நீர் அகற்றும் வாகன பயன்பாட்டின் அவசர அவசியத்தினை முன்னிட்டு நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கிடவும், செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3 | இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம் |

ந.க.எண்.1273/2022/எச்2

தீர்மானம் எண்.264
அ.கு.அனுமதிக்கப்பட்டது

---

26–08–2022

பொருள் எண்.6

நாகப்பட்டினம் நகராட்சியில் பொது நிதி 2022–23ற்கு கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 01–08–2022ல்ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவு | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சிக்கு வாடகை அடிப்படையில் 6500 லிட்டர் கொள்ளவு கொண்ட கழிவு நீர் வாகனம் சப்ளை செய்தல் | 2.30 | திரு. எஸ்.சத்தியநாராயணன் | 0.04 % | -- |
| | | | திரு. கே.கோபாலகிருஷ்ணன் | -- | 4.00% |

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் களம் 5ல் குறிப்பிட்டுள்ள |

தீர்மானம் எண்.265
அ.கு.அனுமதிக்கப்பட்டது

ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டு விலையை விட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.845–37/2022/இ1

26–08–2022

பொருள் எண்.7

தீர்மானம் எண்.266
அ.,கு அனுமதிக்கப்பட்டது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டமன்ற பேரவையில் விதி எண்.110ன் கீழ் அரசு துவக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு பள்ளி வேலை நாட்களில் காலை சிற்றுண்டி வழங்க ஆணையிட்டதன்படி பள்ளி சத்துணவு திட்டம் 2022–23 ற்கு கீழ் கண்ட பணியை மேற்கொள்ள 26–07–2022 ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.23 கூக்ஸ் சாலை பகுதியில் ஒருங்கிகிணைந்த சமையற்கூட கட்டடம் கட்டுதல் | 23.00 | திரு.பி.ரகுநாதன் | 0.02 % | -- |
| | | | திரு.எஸ்.சொக்கலிங்கம் | -- | 1.56% |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் களம் 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டு விலையை விட குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.
3. தமிழக அரசின் இத்திட்டத்தை உடன் செயல்படுத்த வேண்டியதன் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2769/2022/இ1

26–08–2022

பொருள் எண்.8

தீர்மானம் எண்.267
அ.,கு அனுமதிக்கப்பட்டது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழக சட்டமன்ற பேரவையில் விதி எண்.110ன் கீழ் அரசு துவக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு பள்ளி வேலை நாட்களில் காலை சிற்றுண்டி வழங்க ஆணையிட்டதன்படி கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 16–08–2022 ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | 2 | 4 | 5 | 6 |
| 1 | நாகப்பட்டினம் நகராட்சி துவக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி தயார் செய்து வழங்குதல் | ஸ்ரீ அம்மன் ஏஜன்ஸி அண்ணா புதிய பேருந்து நிலையம் வளாகம் நாகப்பட்டினம். | 12.65 | ---- |
| | | எம்/எஸ். டெல்டா இன்ஜினியரிங் சர்வீஸ், புதுத்தெரு, நாகப்பட்டினம் | --- | 13.00 |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் களம் 5ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தபுள்ளியின் விலை குறைவானதாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.
3. தமிழக அரசின் இத்திட்டத்தை உடன் செயல்படுத்த வேண்டியதன் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று

<table>
<tr><td></td><td><table><tr><td></td><td></td><td>பணி உத்தரவு வழங்கிடும் நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் மற்றும் அலுவலக நடைமுறைகளுக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr></table>
ந.க.எண்.2769/2022/இ1</td><td></td></tr>
<tr><td>26-08-2022</td><td>பொருள் எண்.9<br>
தேசிய வாழ்வாதார திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தகுதியான சாலையோர வியாபாரிகள் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/UPA நாள்.16-06-2022ன் படி 15-07-2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் விபரம்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள் ளி கோரிய தொகை</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>4</td><td>5</td></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">நாகப்பட்டினம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையாள அட்டை (ID Card ) தயாரித்து வழங்குதல் விற்பனை சான்றிதழ் (Certificate of Vendors) நகர தெரு விற்பனை திட்டம் (SUP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல்</td><td>Mirifical carrers Pvt. Ltd., No.12A, Second Floor , K.K.Building T.Nagar, Ramanathapuram , Coimbatore.</td><td>ரூ.415/-</td></tr>
<tr><td>Bharathi HR Consultancy , 3/36 First Avenue, Rangasamy Naidu Layout Kuniyamuthur, Coimbatore.</td><td>ரூ.850/-</td></tr>
</table>
<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய Mirifical carrers Pvt. Ltd., Coimbatore என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண்.1215/2020/எப்1</td><td>தீர்மானம் எண்.268<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>26-08-2022</td><td>பொருள் எண்.10<br>
நாகப்பட்டினம் நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டு பல ஆண்டுகளாக உபயோகமற்ற பயன்படுத்த இயலாமல் நிறுத்தி வைக்கப்பட்ட பல்வேறு வாகனங்களை கழிவு செய்ய தமிழ்நாடு மோட்டார் வாகனப்பிரிவு பராமரிப்புத்துறை தானியங்கி பொறியாளர் அரசு தானியங்கி பனிமனை தஞ்சாவூர், அவர்களின் செயல்முறை கடிதம் மூ.மூ.செ.மு.எண் 5/218/2022 நாள்.10.05.2022 -ல்பதிவு எண் உள்ள 18 வாகனங்கள் மற்றும் பதிவு எண் இல்லாத 10 கழிவு வாகனங்களை (scraps ) பொது ஏலம் அடிப்படையில் கழிவு செய்திட ஆணை வழங்கப்பட்டதன் படி 11.08.2022 பொது ஏலம் நடவடிக்கையில் உயர்ந்தபட்ச கேள்வி தொகை ரூ.7,10,000/- கோரிய திரு.ஆர்.கே.முத்துகிருஷ்ணன் என்பவருக்கு கழிவு வாகனங்களை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு
<table><tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr></table>
ந.க.எண்.2092/2021/இ1</td><td>தீர்மானம் எண்.269<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>26-08-2022</td><td>பொருள் எண்.11<br>
நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.23 கூக்ஸ் சாலை பகுதியில் இயங்கி வரும் வீடற்றவர்கள் தங்குவதற்கான இல்லத்திற்கு சுற்று சுவர், கழிவு நீர் வெளியேற்றுதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.90 /- இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு
<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்ற ம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.</td></tr>
</table>
ந.க.எண்.845-46/2022/இ1</td><td>தீர்மானம் எண். 270<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>26-08-2022</td><td>பொருள் எண்.12</td><td></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **நகரமன்ற உறுப்பினர் திரு.மா.தியாகராஜன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –**<br>➢ 8–வது வார்டுக்குட்பட்ட அமிர்தா நகர் பகுதியில் சுமார் 163 சுனாமி நிரந்தர குடியிருப்புகளும், அதில் 700–க்கு மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் குடிநீர்சரிவர கிடைக்கபெறுவதில்லை. நிலத்தடி நீரும் கிடைக்காததால் இப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி அமிர்தா நகர் பகுதியில் இரண்டு இலட்சம் கொள்ளலவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்துக்கொடுக்க இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 271<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.13<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி.கு.ஜோதிலெட்சுமி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –**<br>➢ நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் ஆடு மாடுகள் போன்றவற்றால் சாலைப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் விபத்துகளும் ஏற்படுகின்றன. ஆகவே ஆடு மாடுகளை பிடித்து 15–வது வார்டில் செயல்படாமல் இருக்கும் பட்டியினை செயல்பாட்டுக்கு கொண்டுவந்து நகராட்சிக்கு வருவாய் பெருக்கத்தினை ஏற்படுத்திட இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 272<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.14<br>**நகரமன்ற உறுப்பினர் திரு.ர.முகுந்தன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –**<br>➢ 24–வது வார்டில் இருக்கும் அங்காடியில் பயிலும் குழந்தைகளுக்கு கழிவறை வசதி இல்லாததால் கழிவறைஅமைத்து தரவும்.<br>➢ நகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் நீர்மேல் தளத்திலிருந்து உள்ளே வருகிறது அதனே சரி செய்யவும், ரேஷன்கடை கட்டிடமும் பழுதடைந்துள்ளதை சீரமைத்து தரவும் .<br>➢ பழைய கடற்கரையில் புதிதாக 10 மின் கம்பங்கள் அமைத்து மின் விளக்கு அமைக்கவும் பழைய கடற்கரையில் பூங்கா அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 273<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.15<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.சுந்தரேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்**<br>➢ 20–வது வார்டுக்குட்பட்ட பெருமாள் மேலவடபோக்கி தெருவில் குடிநீர் குழாயில் கழிவுநீர் கலந்து வருவதை சரிசெய்ய இருமுறை பணிகள் மேற்கொண்டும் தொடர்ந்து குடிநீர் குழாயில் கழிவுநீர் கலந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆகவே மேற்படி பகுதிக்கு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 274<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.16<br>**நகரமன்ற உறுப்பினர் திரு.மோ.ஜாஹிர் உசேன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்**<br>➢ 25–வது வார்டுக்குட்பட்ட செம்மரைக்கடை வடக்கு சந்து, தென்சந்து, மேல்சந்து, கீழ்சந்து ஆகிய பகுதிகளுக்கு மழைநீர் கால்வாய் அமைத்தும், சாலையினை செப்பனிட்டு தரவும்,<br>➢ சாலாட்சி கொல்லையில் பேவர் பிளாக் சாலை அமைத்து தரவும்.<br>➢ சர் அஹமது தெரு, நகராட்சி முஸ்லிம் தொடக்கப்பள்ளியில் சத்துணவு கூடம் மற்றும் கழிவறை சேதமுற்றுள்ளதை இடித்துவிட்டு புதிதாக சத்துணவு கூடம் மற்றும் கழிவறையினை அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 275<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.17<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.சத்தியவாணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்**<br>➢ 31–வது வார்டுக்குட்பட்ட பெருமாள் சன்னதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில் உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் கலந்து வருகிறது. இதன் மூலம் மற்ற தெருக்களுக்கு செல்லும் குடிநீர் குழாயிலும் கழிவு நீர் கலந்து வருகிறது. ஆகவே மேற்படி பகுதிக்கு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுகொள்கிறேன். | தீர்மானம் எண். 276<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.18<br>**நகரமன்ற உறுப்பினர் திரு.ஆர்.ஏ.டி.அண்ணாதுரை அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –**<br>➢ 34–வது வார்டுக்குட்பட்ட கீரைக்கொல்லைதெரு, செக்கடிதெரு, திருவேங்கடத்தபிள்ளை தெரு, உப்பனார் சந்து ரயில்வேதென்புறம் போன்ற பகுதியில் வசித்து வரும்பொதுமக்கள் மற்றும் அவசர ஊர்தியான ஆம்புலன்ஸ் மற்றும் போக்குவரத்து பயன்பாட்டிற்கு எனது வார்டில் அமைந்துள்ள ரயில்வே கேட்எண்.47LC –ன் ரயில் போக்குவரத்தின் போது கேட் மூடப்படுவதால் ஒரு | தீர்மானம் எண். 277<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தடைவக்கு சுமார் 2 மணி நேரம் கேட் மூடப்படுகிறது. இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு மக்கள் பெறும் அவதிகுள்ளாகிறார்கள். எனவே மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் போக்குவரத்திற்கு சுரங்கபாதை அமைத்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செய்து தரவும்.<br><br>➢ கீரைக்கொல்லை தெருவில் அமைந்துள்ள C,S,I மேல்நிலை பள்ளியில் இருந்து ரயில்வே கேட் வரை அமைந்துள்ள தார் சாலை சேதமுற்று இருப்பதால் அதனை சீரமைத்து புதிதாக தார் சாலை அமைத்து தரவும் .<br><br>➢ கீரைக்கொல்லைத்தெரு செக்கடி முடுக்கில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் சீரமப்படுகின்றனர்.எனவே மேற்குரிய பகுதிக்கு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | |
| 26-08-2022 | பொருள் எண்.19<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். ஷோபனா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –**<br>➢ 21–வது வார்டுக்குட்பட்ட தாமரைக்குளம் தென்கரையில் 2–வது சந்து மற்றும் 5– வது சந்தில் தெருவிளக்கு இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆகவே மேற்படி பகுதிக்கு புதிதாக தெருவிளக்கு அமைத்து தரவும்.<br>➢ வ.ஊ.சி. தெரு, பவுண்டு தோட்டம், சேர்வை தோட்டம், கம்மாளத்தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சாலை பழுது ஏற்பட்டு போக்குவரத்திற்கும், பொதுமக்களும் சிரமப்படுவதால், மேற்படி சாலையினை செப்பனிட்டு தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 278<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26-08-2022 | பொருள் எண்.20<br>**. நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ்.முகம்மது நத்தர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –**<br>➢ 26–வது வார்டுக்குட்பட்ட பொதுமக்களுக்கு 2–ரேஷன் கடைகள் உள்ளன. அதில் ஒன்று நாகநாதர்சன்னதியிலும் மற்றொன்று நீலாதாட்சியம்மன் கோவில் தெருவில் உள்ளன. சுமார் 750–க்கு மேற்பட்ட குடும்ப அட்டைத்தாரர்கள் ரேஷன் பொருள் வாங்குவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆகவே கல்லுக்காரத்தெரு, நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பின்புறம் பள்ளியின் இடத்தில் ரேஷன் கடை அமைத்து தரவும்,<br>➢ காத்தான் செட்டித்தெரு சாலை மிகவும் பழுது ஏற்பட்டதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் சிரமப்படுகின்றனர். மேற்படி சாலையினை செப்பனிட்டு தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 279<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26-08-2022 | பொருள் எண்.21<br>**நகரமன்ற உறுப்பினர் திருமதி.கு.சித்ரா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –**<br>➢ 27–வது வார்டுக்குட்பட்ட மருந்துக்கொத்தள காளியம்மன் கோவில் நகராட்சி தொடக்கப்பள்ளியில் அமைந்துள்ள அங்கன்வாடி சமையற்கூடம் பழுதடைந்த நிலையில் உள்ளது. மாணவர்கள் நலன் கருதி புதிதாக சமையற்கூடம் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 280<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26-08-2022 | பொருள் எண்.22<br>நாகப்பட்டினம் நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டு பல ஆண்டுகளாக உபயோகமற்ற பயன்படுத்த இயலாமல் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்கள் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களை கழிவு செய்ய பொது ஏலம் அறிவிப்பை தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்குரிய விளம்பரக்கட்டணம் ரூ.14,213/– மட்டும் தினபூமி நாளிதழுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலககுறிப்பு 1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இப்பணிக்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.2410 /2022/இ1 | தீர்மானம் எண்.281<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26-08-2022 | பொருள் எண்.23<br>நாகப்பட்டினம் நகராட்சியின் வார்டு எண்.4 பட்டினச்சேரி செல்லும் பாதையில் இரயில்வே சுரங்க பாதையில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும், பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும், இடையூராக உள்ளதால் அவற்றை சீரமைக்க புதிதாக குழாய் அமைத்து பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் விடுவதற்கும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு 1 மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.282<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2 செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845–9/2022/இ1 | |
| 26–08–2022 | பொருள் எண்.24<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.36 டாடா நகர் பகுதியிலுள்ள பாதாளசாக்கடை திறந்தவெளி கிணற்றில் மண் நிரம்பி தூர்ந்து போய் உள்ளதை தூர்வாரி சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளவும்,இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845–49/2022/இ1 | தீர்மானம் எண்.283<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.25<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022ஐ முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.1 முதல் 12 வரையுள்ள வார்டு பகுதிகளில் உள்ள வாய்கால்களை Earthmoving Machineries Poclin's (Hittachi and JCB ) மூலம் சுத்தப்படுத்துதல் மற்றும் அடைப்புகளை அகற்றும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–38/2022/இ1 | தீர்மானம் எண்.284<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.26<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022ஐ முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.13 முதல் 24 வரையுள்ள வார்டு பகுதிகளில் உள்ள வாய்கால்களை Earthmoving Machineries Poclin's (Hittachi and JCB ) மூலம் சுத்தப்படுத்துதல் மற்றும் அடைப்புகளை அகற்றும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–39/2022/இ1 | தீர்மானம் எண்.285<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.27<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022ஐ முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.25 முதல் 36 வரையுள்ள வார்டு பகுதிகளில் உள்ள வாய்கால்களை Earthmoving Machineries Poclin's (Hittachi and JCB ) மூலம் சுத்தப்படுத்துதல் மற்றும் அடைப்புகளை அகற்றும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–40/2022/இ1 | தீர்மானம் எண்.286<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.28<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022ஐ முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.1 முதல் 12 வரையுள்ள வார்டு பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு நீரை வெளியேற்றும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>அலுவலககுறிப்பு<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்.287<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.845–50/2020/இ1 | |
| 26–08–2022 | பொருள் எண்.29<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022ஐ முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.13 முதல் 24 வரையுள்ள வார்டு பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு நீரை வெளியேற்றும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–51/2020/இ1 | தீர்மானம் எண்.288<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.30<br>நாகப்பட்டினம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022ஐ முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.25 முதல் 36 வரையுள்ள வார்டு பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு நீரை வெளியேற்றும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–52/2020/இ1 | தீர்மானம் எண்.289<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.31<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.24 ஆரியநாட்டு தெருவிலுள்ள மழைநீர் வடிகாலை தூர்வாரி சீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளவும் இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–49/2022/இ1 | தீர்மானம் எண்.290<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.32<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.18 ராமநாயக்கன் குளத்தெருவிலுள்ள மழைநீர் வடிகாலை தூர்வாரி சீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளவும் இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–47/2022/இ1 | தீர்மானம் எண்.291<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.33<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.27 மாங்கொட்டைசாமி கோயில் பின்புறம் உள்ள ஓடையை தூர்வாரி சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு அரசு வழங்கும் இயற்கை இடர்பாடுகள் நிதியினை பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும், இயற்கை இடற்பாடுகள் பணியில் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.845–48/2022/இ1 | தீர்மானம் எண்.292<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 26–08–2022 | பொருள் எண்.34<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.19 தியாகராஜபுரம் குளத்தில் அசுத்தமான நீர் சூழ்ந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அந்த நீரை வெளியேற்றிடவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845–41/2022/இ1 | தீர்மானம் எண்.293<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.35<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண்.4 நாகூர் கீழபட்டிணச்சேரி மற்றும் கீழபட்டிணச்சேரி வடக்கு தெரு பகுதியில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் செல்வதற்கு இடையூராக உள்ளது. எனவே அப்பகுதிகளில் புதிதாக 2 எண்ணிக்கை சிறுபாலங்கள் கட்டவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845–40/2022/இ1 | தீர்மானம் எண்.294<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.36<br>நாகப்பட்டினம் நகராட்சி ஒடாச்சேரி தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள 6 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலுள்ள மோட்டார்களிலுள்ள பழுது சீர்செய்து 50 எச்பி மோட்டார் பொருத்துதல், பழுதடைந்த கேபிள்களை புதிதாக மாற்றுதல், EB மோட்டார் போர்டை மாற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845–27/2022/இ1 | தீர்மானம் எண்.295<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.37<br>நாகப்பட்டினம் நகராட்சி வார்டு எண் 32 சட்டையப்பர் மேலவீதியில் மழைநீர் வெளியேறுவதற்கு ஏதுவாக இரண்டு இடங்களில் சிறுபாலம் கட்டும் பணி மேற்கொள்ளவும்,இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண்.845/2022/இ1 | தீர்மானம் எண்.296<br>அ.,கு அனுமதிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.38<br>நகரமன்ற உறுப்பினர் திரு.ஹீ. முஹமது சேக்தாவூது அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 3–வது வார்டுக்குட்பட்ட செம்மரைக்கடைத்தெரு முகப்பு , மெய்தீன் பள்ளி 4வது தெரு முகப்பு ஆகிய பகுதிகளில் உள்ள சிறுபாலம் சேதமுற்று போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் உள்ளதால், மேற்படி சிறுபாலத்தை செப்பனிட்டு தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுகொள்கிறேன். | தீர்மானம் எண். 297<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 26–08–2022 | பொருள் எண்.39<br>நகரமன்ற உறுப்பினர் திருமதி. பா.வனிதா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் –<br>➢ 6–வது வார்டுக்குட்பட்ட மெயின்ரோடு வி.ஐ.பி.நகர் பகுதிக்கு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுகொள்கிறேன். | தீர்மானம் எண். 298<br>தீர்மாணிக்கப்பட்டது |

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்

ஆணையர்
நாகப்பட்டினம் நகராட்சி